**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.749/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-4/PW-5 | Village: | |
| Name | : சௌந்தரராஜன் | Age | :52 |
| Father's/Husband's Name | : தனவேல் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருப்பனந்தாள் மேலவெளியில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன ராமராஜன் எனது தெருக்காரரர் ஆவார். அசா1 ஐ எனக்கு தெரியும். அவர் ராமராஜனின் அம்மா ஆவார். கடந்த 12.08.2017 ம் தேதி நானும் ஜெயசீலன் என்பவரும் அணைக்கரை சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக இரவு சுமார் 8.30 மணியளவில் கும்பகோணம் செல்லும் சாலையில் மேலவெளி கிராமத்தில் உள்ள வேல் வெல்டிங் பட்டறை அருகே நடந்து

வந்துகொண்டிருந்தபோது எங்களுக்கு முன்பாக செல்வி மற்றும் ராமராஜன் சாலையின் இடது புறமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது பின்னால் இருந்து வந்த ஆட்டோ வேகமாக வந்து ராமராஜன் மற்றும் செல்வி மீது மோதிவிட்டது. இருவரும் அதனால் கீழே விழுந்து விட்டார்கள். ஆட்டோவை ஓட்டி வந்த நபர் ஆட்டோவை நிறுத்துவது போல வேகத்தை குறைத்து பின்னர் விருட்டென ஆட்டோவை எடுத்து சென்று விட்டார். அப்போது அந்த வழியாக வந்த நண்பர் ராஜேந்திரன் என்பவரின் இருசக்கர வாகனத்தில் துரத்தி சென்று மானம்பாடி பெட்ரோல் பங்க் அருகில் விபத்து ஏற்படுத்திய ஆட்டோவை பிடித்துவிட்டோம். ஆட்டோவின் பதிவெண்ணை குறித்து கொண்டோம். ஆட்டோவின் பதிவெண் TN68A2845 ஆகும். ஆட்டோவை ஓட்டி வந்த நபரை விசாரித்தில் அவர் பெயர் சரண்ராஜ், த/பெ. ராஜேந்திரன் , நடுத்தெரு, சோழபுரம் என்று சொன்னார். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் எதிரிதான் விபத்து சமயத்தில் ஆட்டோவை ஓட்டி வந்த மேற்படி சரண்ராஜ் ஆவார். ( சாட்சி எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்) . அதன் பிறகு நான் சென்னை சென்றுவிட்டு 15.08.2017 ம் தேதி ஊருக்கு வந்தேன். அப்போது விபத்து ஏற்படுத்திய ஆட்டோவின் பதிவெண்ணை பிரபு மற்றும் ராஜேஷ் ஆகியோரிடம் தெரிவித்தேன். விபத்தில் அடிபட்ட ராமராஜன் 14.08.2017 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மானம்பாடி பெட்ரோல் பங்கில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் அடிக்கடி அந்த பெட்ரோல் பங்க் செல்வேனா என்றால் போக மாட்டேன். நான் அணைக்கரையில்

இருந்து திருப்பனந்தாளுக்கு எந்த வாகனத்தில் வந்தேன் என்றால் அணைக்கரையில் இருந்து திருப்பனந்தாளுக்கு பேருந்தில் வந்தேன். அங்கிருந்து நானும் ஜெயசீலனும் ஊருக்கு நடந்து சென்றோம். எங்களுக்கு பின்னால்தான் ஆட்டோ வந்து என்றால் சரிதான். ஆட்டோ எங்களுக்கு பின்னால் வந்ததால் ஆட்டோ என்ன வேகத்தில் வந்தது என்று தெரியாது என்றால் ஆட்டோ எங்களுக்கு முன்னால் சென்றபோது நான் பார்த்தேன். அதனால் தெரியும். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆட்டோவினை நாங்கள் ஓவர்டேக் செய்துதான் பிடித்தோம் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி சென்றேனா என்றால் ஆட்டோ விபத்து ஏற்படுத்திவிட்டு சென்றதால் ஆட்டோவின் வேகத்திற்கு ஓட்டி சென்று ஆட்டோவை பிடித்தேன். அந்த ஆட்டோவில் என்ன பெயர் எழுதி இருந்தது என்றால் அதனை பார்க்கவில்லை. ஆட்டோவின் பதிவெண்ணை பார்த்தேன். ஆட்டோவின் ஓட்டுநரை பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் காவல் ஆய்வாளர் வாங்கினார். போலிசார் விசாரணையில் நான் யாருடைய இருசக்கர வாகனத்தை கடனாக வாங்கி சென்றேன் என்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லி உள்ளேன். போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒருமுறை விசாரித்தார்கள். ஆட்டோ எவ்வளவு வேகமாக சென்றது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். எவ்வளவு வேகம் என்பதை நான் பார்க்கவில்லை. சம்பவத்திற்கு பிறகு நான் எங்கு சென்றேன் என்றால் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்துவிட்டு நான் சென்னை சென்றுவிட்டேன். சம்பவத்தன்று மழை பெய்ததா என்றால் மழை பெய்தது. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் ஆட்டோவை யார் ஓட்டி வந்தது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. வழக்கு விபத்தில் இறந்துபோன நபர் எனது தெருக்காரர் என்பதால்

அவரது இறப்பிற்கு மோட்டார் வாகன இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக அசா1 அளித்த பொய் புகாருக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.749/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-2/PW-4 | Village: |
| Name : பிரபு | Age :45 |
| Father's/Husband's Name : சோனை | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருப்பனந்தாள் மேலவெளியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன ராமராஜன் எனது பக்கத்துவீட்டுக்காரர் ஆவார். அசா1 ஐ எனக்கு தெரியும். அவர் ராமராஜனின் அம்மா ஆவார். கடந்த 12.08.2017 ம் தேதி நான் வேலைக்கு சென்றுவிட்டு சம்பளம் வாங்கிவிட்டு இரவு சுமார் 8 மணியளவில் கும்பகோணம் செல்லும் சாலையில் மேலவெளி கிராமத்தில் உள்ள

வேல் வெல்டிங் பட்டறை அருகே நடந்து வந்துகொண்டிருந்தபோது எனக்கு முன்பாக செல்வி மற்றும் ராமராஜன் சாலையின் இடது புறமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது பின்னால் இருந்து வந்த ஆட்டோ வேகமாக வந்து ராமராஜன் மற்றும் செல்வி மீது மோதிவிட்டது. ராமராஜன் கீழே விழுந்து எழுந்திருக்காமல் இருந்தார். நாங்கள் சென்று தூக்கி பார்த்தபோது அவருக்கு தலையில் அடிபட்டிருந்து. செல்வி நடக்கமுடியாத நிலையில் இருந்தார். நான் சத்தம் போட்டவுடன் அருகில் இருந்த நபர்கள் வந்துவிட்டார்கள். சௌந்தரராஜன் என்பவரும் அங்கு வந்தார். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக அடிபட்ட நபர்களை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். 2 நாட்கள் கழித்து ராமராஜன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். விபத்து ஏற்படுத்திய ஆட்டோவை ஓட்டி வந்த நபர் ஆட்டோவை நிறுத்தாமல் சென்றுவிட்டார். சௌந்தரராஜன் அவரது இருசக்கர வாகனத்தில் சென்று ஆட்டோவை தடுத்து நிறுத்தினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவம் பற்றி செல்வி மற்றும் ராமராஜன் ஆகியோருக்குதான் நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. எனக்கும் தெரியும். ஆட்டோ எவ்வளவு வேகமாக வந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. ஆனால் வேகமாக வந்தது. வழக்கு விபத்தில் இறந்துபோன நபர் எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவரது இறப்பிற்கு மோட்டார் வாகன இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக அசா1 அளித்த பொய் புகாருக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**